## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 5/2017 | பி.வா.சா. | : 2 |
| பெயர் | : ராமன் அம்பலம் | த/பெ. | : அழகன் அம்பலம் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : சேர்வீடு |
| தேதி | : 17.06.2026 | வயது | : 49/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 2ம் சாட்சியாவேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) எனது தாத்தா ராமனம்பலம் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.1441–ற்கான கணினி நகல் – சா.சா.ஆ.1 ஆகவும்,

2) எனது பெயரில் ஏற்பட்டுள்ள வீட்டுவரி ரசீது அசல் – சா.சா.ஆ.2 ஆகவும்,

3) எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) – சா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

மேற்கண்ட சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 17.06.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.17 16:38:10 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.